Reg. No. M. 2997.

தனிப்பிரதி அணு 1



ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.



REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité


# VITTAGAM


LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.



JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI


# வித்தகம்


வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM NO. 4, Pondichery.


நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.


காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி
நெ. 4, புதுவை.

VOL I. புதுவை, பவ-ஹூ ஆவணி-மீ - ௧௬ (16—8—34) No. 38.


## திருமந்திரம்

அப்பினி லுப்பென வத்த னணைந்திட்டுச்
செப்பு பராபரஞ் சேர்பர மும்விட்டுக்
கப்புய சொற்பத மாளக் கலந்தமை
யெப்படி யப்படி யென்னுமவ் வாறே.

அன்னையு மத்தனு மன்புற்ற தல்லது
வன்னையு மத்தனு மாரறி வாரென்னை
யன்னையு மத்தனு மியானு முடனிருந்
தன்னையு மத்தனை யான்புரந் தேனே.

மண்ணிற் கலங்கிய நீர்போன் மனிதர்க
ளெண்ணிற் கலங்கி யிறைவ னிவனென
ருண்ணிற் குளத்தின் முகந்தொரு பால்வைத்துத்
தெண்ணிற் படுத்த சிவனவ னாமே.

பையினி னுள்ளே டடிக்கத வொன்றிடின்
மெய்யினி னுள்ளே விளங்கு மொளியதாங்
கையினுள் வாயு கதித்தங் கெழுந்திடின்
மையணி கோயின் மணிவிளக் காமே.

விளங்கிடும் வாயுவை மேலெழ வுன்னி
நலங்கிடுங் கண்டத்து நாபியி னுள்ளே
வணங்கிடு மண்டலம் வாய்த்திடக் கும்பிச்
சுணங்கிட நின்றவை சொல்லலு மாமே.

பித்தன் மருந்தாற் றெளிந்து பிரகிருதி
யுய்த்தோன்று மாபோல் விழியுந்தன் கண்ணொளி
யத்தன்மை யாதல்போ னந்தி யருடரச்
சித்தந் தெளிந்தேன் செயலொழிந் தேனே.

உ

திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய

ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய

ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு

மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

(திருவாசகம்)

# வித்தகம்

புதுவை,
பவ-ஹு ஆவணி-மீ 1உ

## மாற்றிப் பிறத்தல்

மாற்றிப் பிறத்தல் என்றால் என்னை? அது தான் துவிஜத்துவம் எனப்படுவது துவிஜத்துவம் — இரண்டாவது பிறப்பு. துவிஜர்—இரு பிறப்பாளர்—மாற்றிப் பிறந்தவர் என்பது. இதன் உண்மை தான் யாதோ? எனின், அதுவே இச் சிறிய கட்டுரையில் ஒருவாறு கூறுவான் எடுத்துக்கொண்ட பொருளாகும்.

உடல் நோயால் நலியும்போது—உடலுயிர் துன்பமடையும்போது அந் நோயை மாற்றவேண்டும் என்பர்; தீய குணங்கள் நல்லனவாக மாற்றமடையவேண்டும் என்பர். துன்பம் இன்பமாக மாறுவதே மாற்றம் என்பது. எவ்வாற்றானும் துன்பம் நீங்கி இன்பமடைவதையே யாவரும் விழைவர். துன்பம் நீங்கி இன்பம் அடைவதே சீவ முயற்சியின் நோக்கம். அதுவே சீவ இயலுக்கு ஐ—சீவ இயற்கை என்க. பிணி மூப்புச் சாக்காடும் பிறவியுமே துன்பம் தருவன. இவை நீங்கப் பெறுவதே-மாறுவதே இன்பம் என்பது—வீடு என்பது. செம்பில் களிம்பு போல உடலுயிரில் உள்ள அழுக்கே—பாசமே — அசுத்தமே—அசுத்த நிறைமே ய பிணி மூப்புச் சாக்காடும் பிறவியுமாகிய துன்பத்துக்கு மூலமாகும் — காரணமாகும். காரணமாகிய அசுத்த நிறை அமல நிறையாக மாற்றம் அடையவேண்டும். அவ்வாறு மாற்றம் அடையுங்கால் காரியமாகிய பிணி முதலியன எல்லாம் மாற்றமடையும் — ஒழியும். மாயக் குரம்பையாகிய — மலக் குரம்பையாகிய இவ் அசுத்த தநுவானது அமலக் குரம்பையாக மாற்றமடைவதே மாற்றிப் பிறத்தல் என்பது — துவிஜத்துவம் என்பது. "மாயக் குரம்பை நீங்க வழிவைத்தார்க்கு அவ்வழியே போது நாமே" எனவும், "பூந்துருத்தி பூந்துருத்தி என்பீராகில் பொல்லாத புலால் துருத்தி போக்கலாமே." எனவும் அருளிச் செய்தார் நமது அப்பர். இதனால், குருநெறி கடைப்பிடித்து வழுவற ஒழுகுதலால் புலால் துருத்தியாகிய இம் மருளுடம்பைப் பூந்துருத்தியாக மாற்ற வேண்டும் என்பதும், அதுவே மாற்றிப் பிறத்தலாகிய முத்தி நெறி என்பதும் நன்று வற்புறுத்தப் பட்டமை கண்டுகொள்க. உடல் மாற்றமடையவே அதனின் வேறாகாத உயிரும் மாற்றமடையும் என்பது சொல்லாமலே அமையும். அசுத்த நிறையாகிய உடலுயிரே சீவன் எனப்படுவது. சீவ சப்தத்தால் குறிக்கப்படுவது சத்தும் சித்துமாகிய —சத்து சித்தாகிய உடலுயிரின் கூட்டுறவே யன்றி வேறன்று. உடல் மாற்ற மடையாத விடத்து உயிர் மாற்றமடைதல் முடியாத காரியமே. உடல் நலம் குன்றிய காலத்து உணர்ச்சி மழுக்கமடைதல் கண்கூடு அல்லவா? உடல் பிணமாகும் காலத்து —இறக்கும் போது அறிவு-உணர்ச்சி கெடுகின்றது அல்லவா? சேதனம் பின்னமடைகின்றது அல்லவா? இது பற்றியே பிருதிவி ரூப அன்ன காரியம் மனம் எனவும், ஜல காரியம் பிராணன் எனவும் சாந்தோக்கிய உபநிடதம் வற்புறுத்துவதாயிற்று என்க. இதனால் உடலுயிர்களின் அந்நியோந்நிய சம்பந்தம் வெள்ளிடை மலையாம். விரிப்பிற் பெருகும். அமயம் நேர்ந்துழி விரித்து விளக்கப்படும்.

உடலுயிர் மாற்றமடைந்து துன்பம் நீங்கி இன்புறுதல்—கட்டுக்கள் அற்று வீடடைதல் சீவ முயற்சியால் முடியாதோ? எனின், முடியாது என்றே முக்காலும் மொழியப்படும். சீவ முயற்சியால் கண்டு பிடிக்கப்படும் எவ்வகையான உபாயங்களாலும் தந்திர மந்திர யோக சமாதிகளாலும் குட்டிக் கரணங்களாலும் நிலையான இன்பம்—வாய்மையான இன்பம்-சுகம் கைகூட முடியாது என்பது கண்கூடு. இவ்வகையான தந்திரம் சீவ முயற்சியால் —"ஸயன்ஸு"கள் மூலமாகக் கண்டு பிடிக்கக் கூடியது என்றால், வாலறிவனும் தனக்குவமை இல்லாதவனுமாகிய குருபரன் எற்றிற்கு? கடவுள் எற்றிற்கு? சீவர்கள் முனைப்போடு கூடிய ஆராய்ச்சி வகையால் பலவகையான பொறிகளையும்-யந்திரங்களையும் —விமானங்களையும் உலக வியாபார தந்திரங்களையும் கண்டு பிடிக்கிறார்கள் —உளாற்றுகின்றார்கள். ஆனால், மாற்றிப் பிறந்து பிணி மூப்புச் சாக்காடும் பிறவியும் ஒழிந்து பேரின்பம் பெறுவது என்றால், அதற்கேற்ற அறத்தாறு—உபாயம் சிற்றறிவுடைய சீவர்களது முயற்சியால் கண்டுபிடிக்கப் படுவதன்று. அது சீவர்களாகிய நம்மனோர் சிந்தனை சொற் செயல்களுக்கு எட்டாதது என்க. உலகத்திலே சீவர்

கள் பக்குவங்களுக்கு ஏற்றவாறு போலியாக — கற்பனையாக அமைந்துள்ள அறத்தாறுகள் — நெறியல்லா நெறிகள் பலப்பல. அவையெல்லாம் வாய்மையான அறத்தாறு என்னும் குருநெறி ஒன்று உள்ளது என அதனை நாடச்செய்யும் ஆற்றல் உளதாக்கும் அளவிற் பயன்படுவனவே யன்றி, மாற்றிப் பிறக்கும் வகையை அஃதாவது சீவர்கள் சடபேதம் கர்மபேதம் என்பனவற்றிற்கு ஏற்ற சாதக யோகங்களைக் கூறுவன வாகா என்பது வெள்ளிடை. சகல சீவராசிகட்கும் உரியதாய் வாய்மையான அறத்தாறு எனப்படும் குருநெறியானது வாலறிவனாகிய சற்குருநாதனால் — கயிலை முதற்குரவனாகிய நந்தி பெருமானால் வகுக்கப்பட்டுள்ளது — அருளப்படுவது என்க.

## திருமந்திரம்

சைவ சமயத் தனிநா யகநந்தி
யுய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு
தெய்வ சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்து ளார்க்கு வகுத்துவைத் தானே.

(ஷை 5-ம் தந். உட்சமயம், செ. 11.)

என அருளிச் செய்தார் வாய்மையான குரு நெறி கண்டு மாற்றிப் பிறந்து உலக குருவாய் வதிந்து வேத உண்மைகளை வெளிப்படுத்தி உண்மை முத்தியடைந்த எம் அண்ணலாகிய திருமூலர். மாற்றிப் பிறக்கும் வகை அறியாது கற்பனையாகிய போலிகளையே உண்மை என நம்பி அமைதலால் துன்பம் நீங்கி இன்புற்று நித்தியத்துவம் அடைதல் முயற்கொம்பே என்பதனைப் பின்வரும் பிரமாணமும் நன்று வற்புறுத்துகின்றது.

## பட்டினத்தடிகள்

நீற்றைப் புனைந்தென்ன நீராடப்
போயென்ன நீ மனமே
மாற்றிப் பிறக்க வகையறி ந்தாயில்லை
மா மறைநூல்
ஏற்றிக் கிடக்கு மெழு கோடி மந்திர
மென்ன கண்டாய்
ஆற்றிற் கிடந்து துறை தெரியாமல்
அலைகின்றையே.

அரிய பெரிய வேத ரகஸியத்தை உள்ளுறையாகக் கொண்ட இச்செய்யுள் குருவருளால் மாற்றிப் பிறந்து நித்தியத்துவம் பெற்ற பட்டினத்தடிகள் அருளியது. மாற்றிப் பிறக்கும் வகைக்குரிய தந்திரத்தை — சாகாக் கல்வி என்னும் வாய்மையான கல்வியைக் குருவருளால் அறிந்து உய்தியடையாத விடத்து, கற்பனையாகிய நீற்றையே வாய்மையான நீறு என நம்பிப் பட்டை பட்டையாக அணிவதாலும், உலகில் உள்ள தீர்த்தங்களில் முழுதுவதாலும், உலகில் நூல்களாக வழங்கும் வேதங்களில் நம : சுவஹா : முதலிய எழு ஈறு (கோடி)களையுடைய மந்திர வாக்கியங்களை உச்சரிப்பதாலும் உண்மைப் பயன் அடைய முடியாது இம் மாயாப் பிரபஞ்சமாகிய ஆற்றில் கிடந்து கரை தெரியாமல் வருந்த வேண்டியதேயாகும் என்பது இதன் பொருளாகும். ஆகவே வாய்மையான குரவன் அருளால் பெறப்படும் அறத்தாறுகளால் மாற்றிப் பிறப்பதே இம்மாயை வலையினின்றும் நீங்கி இன்புற்று நித்தியத்துவம் அடையும் நெறி என நன்று வற்புறுத்துக் கூறப்பட்டதாயிற்று. இவ்வாறு வரும் பிரமாணங்கள் பல. அவற்றுட் சில காட்டுதும் :

## அப்பர் தேவாரம்

கங்கையாடிலென் காவிரியாடிலென்
கொங்குதண் குமரித்துறையாடிலென்
பொங்குமாகடலோத நீராடிலென்
எங்குமீசனெனாதவர்க்கில்லையே.

(ஷை-பாவநாசத் திருக்குறுந்தொகை, செ 2.)

[எங்கும் ஈசன் எனாதவர்க்கில்லை — மாற்றிப் பிறத்தலால் எங்கும் சிவமாக வாய்மையில் கண்டு நிற்கும் சகச நிட்டை கைவரப் பெறாதவர்க்கு வீடு பேறு இல்லை என்பது.]

## சிவ வாக்கியர் பாடல்

தீர்த்தமாட வேணுமென்று தேடுகின்ற [தீனர்காள்
தீர்த்தமாட லெவ்விடந் தெளிந்து நீ [ரியம்பிலீர்
தீர்த்தமாக வும்முளே தெளிந்து நீ [ரிருந்தபின்
தீர்த்தமாக வுள்ளதுஞ் சிவாய [வஞ்செழுத்துமே.

[சிவாய அஞ்செழுத்து — அமல ஐகாரம். மாற்றிப் பிறந்த மெய்யடியார்க்கு எம்பெருமான் திருவடியாகிய இதுவே வாய்மையான தீர்த்தமாகி அமையும். உடலுயிரை அமலமாக்கி நித்தியத்துவம் அளிப்பது இதுவே என்க.]

“சிவாயநம என்னும் குளிகையிட்டுப் பொன்னாக்குவன் கூட்டையே” (திருமந்திரம் 9-ம். தந்; 6-வது சூக்கும பஞ்சாக்கரம், செ. 1.) எனத் திருமூலர் அருளியதும் அறிக.

## திருமந்திரம்

உள்ளத்தி னுள்ளே யுளபல தீர்த்தங்கள்
மெள்ளக்குடைந்துநின்றாடார்வினைகெடப்
பள்ளமு மேடும் பரந்து திரிவரிக்
கள்ள மனமுடைக் கல்வியில் லோரே.

(ஷை 2-ந் தந். 18-வது தீர்த்தம், செ. 1.)

[மாற்றிப் பிறந்து வாய்மையான தீர்த்தங்களைத் தம் முள்ளே கண்டு ஆடுபவரே பாசங்கள் பற்றுக்கள் நீங்கி உய்தியடைய வல்லார் என்பதும், கற்பனையாகி விளங்கும் தீர்த்தங்களில் ஆடும்படி அலைந்து திரிவோர் வாய்மையான கல்வி இல்லாதவர் என்பதும், படிற்றொழுக்கம் உடையவர் என்பதும் இதனால் நன்று வற்புறுத்தப் பட்டமை கண்டு கொள்க.]

ஊனூறல் பாயு முயர்வரை யுச்சிமேல்
வானூறல் பாயும் வகையறி வாரில்லை
வானூறல் பாயும் வகையறி வாளர்க்குத்
தேனூறல் உண்டு தெளிதலு மாமே.

(ஷை 3-ம் தந். கேசரி யோகம், செ. 6.)

## அசப்பேய்ச் சித்தர் பாடல்

தேனாறு பாயுமடி அகப்பேய்
திருவடி கண்டவர்க்கே

ஊறு மில்லையடி அகப்பேய்
ஒன்றையு நாடாதே.

(ஷை செ. 58.)

[இவற்றால் வாய்மையான தீர்த்தம் இன்னதென்பது கூறப்பட்டது. உயர் வரை உச்சி—சந்திர மண்டலம். வான் ஊறல்— ஆகாய கங்கை — அமுதம். இது தான் வாய்மையான கங்கை; சிவன் சடையில் விளங்குவது; மாற்றிப் பிறந்தவரால் அடையப்படுவது. இதனை அடைவது எளிதன்று. பகீரதப் பிரயத்தனம் வேண்டும். பகீரதப் பிரயத்தனமாக மாற்றிப் பிறந்தால் வாய்மையான கங்கை முதலிய தீர்த்தங்களில் திளைத்து ஆடி நித்தியத்துவம் அடையலாம்.]

இவ்வாறு கூறியதனால் இவ் வேத நூல்களெல்லாம் கற்பனைகளையும் புறக்கணிக்குமாறு கூறியன ஆமோ? இல்லை. இல்லை. மற்றோ, கற்பனைகளாகிய இடுகுறிகளால் உண்மையை நாடி உய்தி அடையாது இவ் இடுகுறிகளையே உண்மை என நம்பி அமைந்து சாதலடையும் மூடக்கொள்கையையே கண்டித்தன என்க. சீவர்கள் பக்குவம் நோக்கிக் கற்பனைகளையும் தத்துவப் பெரியார் பாராட்டியதும் உண்டு. வாய்மையான நீறு இன்னதென்பது "பாசு பதம்" என்னும் கட்டுரையில் (வித்தகம், இல. 37) ஒருசிறிது கூறப்பட்டது. மாற்றிப் பிறத்தலாற்றான் நித்தியத்துவம் அளிக்கும் வாய்மையான நீறு அணியப்படும். அதுதான் சரீரத்துள்ள அசுத்த பௌதிகமாகிய மலம் சிவாக்கினி என்னும் அமல அக்கினியால் தகிக்கப்பட்டமையாலான நீறு—மல பௌதிகம் விமல பௌதிகமாக மாறிய நீறு என்க. இது தான் பொற் சுண்ணம்—செம் பொன் செய் சுண்ணம். இந்த நீறுதான் விபூதி —விசேஷமான செல்வம் அளிப்பது; மஹைஸ்வர்யம் என்னும் இந்திர போகம் அளிப்பது—பிணி மூப்புச் சாக்காடும் பிறவியும் ஒழித்து நித்தியத்துவம் அளிப்பது. இந்த நீறுதான் எம்பெருமான் செம்பவளத் திருமேனியில் இலங்குவது இது தான் "கங்காளன் பூசும் கவசத் திருநீறு" "சிங்காரமான திருவடி" சேரச் செய்வது. (திருமந்திரம். 5ம் தந். திருநீறு, செ. ௨.) இதுவே ரக்ஷை—ரக்ஷக தேகம் — விதேகம் — விமலதேகம் என்க. இந்த நீற்றை அணிபவரே சைவர்— சிவ சம்பந்த முடையவர் — வாய்மையான சைவர் எனப்படுவர் என்க. மெய்யடியார் அணியும் நீறு இதுவே என்க. இதற்கு அறிகுறியாகவே சுகாதார முறைக்கு ஏற்றதாகிய பசுவின் சாணத்தை—மலத்தை அக்கினியால் நீறாக்கி அணிவது உலகியலாயிற்று. கற்பனையாகிய இந்த நீறுதான் எம் போலிய போலிச் சைவர் வாய்மை எனக் கொள்வது. மாற்றிப் பிறந்த போது தான் — துவிஜத்துவம் அடைந்த போதுதான் வாய்மையான நீறு தீர்த்தம் முதலியன காணப்படும். கற்பனையாகிய போலியை உண்மை என நம்பி அமைவதால் அறமுதல் நாற்பொருட் பயனை அடைய முடியாது என்பதனைப் புலப்படுத்துவதற்கே "நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன" என்றனர் அடிகள் என அறிதல் வேண்டும்.

மாற்றிப் பிறந்தபோதுதான் வாய்மையான வேதங்கள் — மந்திரங்கள் காணப்படும்—கண்டு ஓதப்படும்.

"அரவொலி யாகமங்கள் அறிவா
[ரறிதோத்திரங்கள்
விரவிய வேத ஒலி விண்ணெலாம் வந்
[தெதிர்ந்திசைப்ப"

என்றனர் தம்பிரான் தோழர்.

உலகில் வழங்கும் கற்பனை வேதங்கள்—மந்திரங்கள் எல்லாம் வாய்மை ஒன்று உள்ளது என அதனைக் குரு நெறியால் அடையச் செய்யுமளவிற் பயன்படுவனவே யன்றி வேறல்ல. உலகில் வழங்கும் வேதங்களை ஓதுவதால் உண்மைப் பயன் அடைய முடியாது என்பதனையும், மாற்றிப் பிறந்து வாய்மையான வேதங்களைக் கண்டு ஓதுதலாற்றான் நித்தியத்துவம் உளதாகும் என்பதனையும் பின்வரும் பிரமாணங்கள் நன்று வற்புறுத்துகின்றது.

## சிவவாக்கியர் பாடல்

சாமம் நாலு வேதமுஞ் சகல சாத்திரங்
[களும்
சேமமாக வோதினுஞ் சிவனை நீரறிகிலீர்
காமநோயை விட்டு நீர் கருத்துளே
[யுணர்ந்தபின்
ஈனமற்ற காயமாயிருப்ப னெங்களீசனே.

காமநோயை விட்டுக் கருத்துளே உணர்தல் என்றால் என்னை? எனின், சிறிது கூறுதும்:

அருந்தல் பொருந்தல்களால் காமம் வெல்லப்பட வேண்டும். காமத்தால் அடையப்படுவது காதல். காமமுடையான் வேதமோத அருகனல்லன். அப் பெற்றி காமத்தின் பயனான காதல் உடையானுக்கே உரியது. ஆதலாற்றான்,

"காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி
ஓதுவார்.............................."

என வேதம் ஓதுவோர் இலக்கணத்தை அருளிச்செய்தார் ஞானசம்பந்தர். இக் காதலைத் தான் "நமச்சிவாய" என்னும் நாமத்தால் சதுரப்பாடுடையார் கூறுகின்றனர். இவ்வாறு வாய்மையான வேதம் ஓதுவாரை நன்னெறிக்கண் உய்க்கும் இக் காதல் என்க. இக் காதலே கந்தழியின் வடிவம்.

"...................................காதலும்
ஆக்கி அளித்து அழிக்கும் கந்தழியின்
பேருருவே
நோக்கிலரை நோவதெவன்."

என்றனர் பெரியார். "கண்ணீர்மல்கி" என்பது கண்ணில் நின்று அசுத்த நீர் வடிதலைக் குறித்த தன்று; இது உலகில் வழங்கும் அழுகை அன்று; நீலிக் கண்ணீராகிய மாய அழுகையைக் குறித்ததன்று. கண்ணிற் கருவிழி மையத்து அசையும் நீர் அசுத்தமானது. காதல் ஏற்படும் காலத்து

இவ் அசுத்த நீர் அமல நீராக மாற்றமடையும். "மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி" (திருவாசகம், திருக்கழுக்குன்றப் பதிகம் செ. 3) என்று அருளியது மாணிக்கம் அல்லவா? கண்ணை அப்புதல்—அணிதல்—அழகு செய்தல் என்பதும் இதுவே என்க. ஏற்ற சாதகங்களால் அசுத்த நீரை மாற்றிக் கண்ணை அப்பினால்—அணிந்தால் — அழகு செய்தால் அமல நீர் பெருக்கமுறும் என்க. இத்தன்மை வாய்ந்தவரே கண்ணப்பர் — மெய்யடியார் என்க. பின்வரும் பிரமாணமும் இவ்வுண்மையை நன்கு வற்புறுத்துதல் கண்டு கொள்க:

## அப்பர் தேவாரம்.

"கடிமலர்ந்த மலர்க்கொன்றைச் சடை [யான் கண்டாய்
கண்ணப்ப விண்ணப்புக் கொடுத்தான் [கண்டாய்......"

(திருமாற்பேறு—திருத்தாண்டகம் செ. 6.)

[விண்ணப்பு — அமல நீர். விண் ஞானாகாசம். கண்ணப்பல்—அசுத்த நீரை மாற்றிக் கண்ணை அழகு செய்தல்.] மெய்யடியாரெல்லாம் இப்பெற்றி கைகூடப் பெற்றவரே என்க. அமல நீர் பெருக்கமுறின் ஆம் பயன் என்னை எனின், அமல சத்திகள்— சூக்கும சத்திகள் அனைத்தும் காணப்படும் என்க. இது தான் ஞான நேத்திரம். இதனை அடைவது எளிதன்று. இதற்குத் தான் பாடு அதிகம். இதுதான் உபநயனம் என அறிதற்பாற்று. இத்தகைய வாய்மையான உபநயனமுடைய துவிஜரே—மாற்றிப் பிறந்த மெய்யடியாரே வாய்மையான வேதங்களைத் தம்முள்ளே கண்டு ஓதுதற்கு அருகராவர் என்க. இவ் வேதங்களை ஓதுதலால் ஆம் பயன் என்னை? எனின், அதுதான் அறத்தாறுகள் யாவற்றையும் உணர்ந்து ஒழுகி அமலம் பெற்று நித்தியத்துவம் அடைதலே—வீடுபேறு அடைதலே என்று கூறப்படும். இது பற்றியன்றோ,

வேதத்தை விட்ட வறமில்லை வேதத்தி
னோதத் தகுமற மெல்லா முளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை யோதியே வீடுபெற் றார்களே.

(திருமந்திரம், வேதச் சிறப்பு, செ. 1.)

என அருளிச் செய்தார் எம் அண்ணலாகிய திருமூலர் என அறிக. வாய்மையான வேதங்களை ஓதுவதால் தர்க்கவாதங்கள் ஏற்படமாட்டா; சர்ச்சைகள் விளையமாட்டா; பூரண ஞானமே—வாய்மையான சாந்தியே ஏற்படுவதாகும். இவற்றால் வீடு பேறு உளதாகும். அமல ஐகார விளைவே ஒவ்வொரு சீவனுக்கும் வேதமும் ஆகமமுமாகி அமையும். இத்தகைய வாய்மையான வேதங்களை ஓதும் துவிஜர் எம்பெருமான் வடிவமாகி நித்தியத்துவம் அடைதல் திண்ணம் என்பார் "ஈனமற்ற காயமாய் இருப்பன் எங்கள் ஈசனே" என்றனர் சிவவாக்கியர் என அறிக. எம்பெருமான் வடிவமாய இவ் அமல தநுவே "ஈனமில் காயம்" (திருமந்திரம். நின்மலாவத்தை செ. 17) எனத் திருமூலரால் அருளப்பட்டது. இதுவே ஓ வடிவம்—பிரணவ வடிவம்—சுத்த மாயா வடிவம்—சூக்கும வடிவம் என்க. இவ் வடிவம் சீவன் முத்தி நிலை பூரணப்பட்டோர்க்கே உரியது. அசுத்த மாயா வடிவமாகிய மருளுடம்பே உரிய சாதகங்களால் முறையே விமலமாய் அமலமாவது — சூக்குமமாவது என்க. துவிஜத்துவம் என்னும் மாறிப் பிறத்தலாகிய இவ் உண்மையை அறியாதார் மருளுடம்பு பிணமாகி விழுந்த பின் உயிர் அதனைப் பிரிந்து சுத்த மாயா வடிவம் பெறும் என இயற்கை விரோதமாகப் பிதற்றி அமைவர். அசுத்தத்தின் ஈற்றில் துலங்குவதே சுத்தமாதலால், அவ் அசுத்தம் நிறைமுறையோடு பஞ்சீகரணிக்கப்பட்டுத் துவிஜத்துவம் அடையப்பெற்றாலன்றி, சுத்தமாயா வடிவமாகிய சூக்கும வடிவம் ஏற்படுவது முயற்கொம்பேயாகும். மாற்றிப் பிறந்த காலத்துச் சத்தும் சித்தும் எவ்வாறாகும்? எனின், சத்துக்குச் சித்து உணவும் சித்துக்குச் சத்து உணவுமாகிச் சமநிறைகொண்டு சிவமும் சத்தியுமாய்க் கூடிக் குழையும் என்று கூறப்படும். பின் வரும் பிரமாணம் இவ் வுண்மையை நன்கு புலப்படுத்தும்.

## நன்கொடை

"வித்தகம்" எனும் எமது பத்திரிகைக்கு மனமுவந்து நன்கொடையாக ரூபா மூன்று அளித்த (A.E. Beauchamp, Trained Teacher, Zahira College, Colombo) கொழும்பு, ஜகீர கோலேஜ் உபாத்தியாயர் ஏ. ஈ. போஷாம் அவர்களுக்கு எமது மனமார்ந்த வணக்கம் என்றும் உரிமையாகற் பாலது.

[ப—ர்]

## மதுரகவி ஆழ்வார்

வினா:— "செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?"

## நம்மாழ்வார்

விடை:—"அத்தைத் தின்று அங்கே கிடக்கும்".

தம்முள்ளே திருவடியைக் கண்டவரே—குரு தரிசனம் பெற்றவரே மாறிப் பிறந்து பிணி மூப்புச் சாக்காடும் பிறவியும் ஒழிந்து நித்தியத்துவம் பெறுபவராவர்.

## அப்பர் தேவாரம்

பிறப்பு மூப்புப் பெரும் பசிவான் பிணி
இறப்பு நீங்கி இங்கு இன்பம் வந்தெய் [திடும்
சிறப்பர் சேறையுட் செந்நெறியான்கழல்
மறப்பதின்றி மனத்தினுள் வைக்கவே.

(ஷ திருச்சேறை — திருக்குறுந்தொகை செ. 3.)

[இங்கு — இவ்வுலகம் — எடுத்த பிறவி என்பது; மாற்றிப் பிறத்தலைக் குறித்தது.]

மருளுடமபினர் திருவடியைக் காணுதலும் அதனை மறவாது மனத்துள் வைத்தலும் முடியாத காரியம். முடியும் காரியம் எனின், அது வெற்றுரையேயன்றி வாய்மையன்று. ஏன்? அவர் மாற்றிப் பிறந்து நித்தியத்துவம் பெறாது பிணி மூப்புக்களால் பிணமாகிச் சாக்காடடைதல் கண்கூடாதலின் என்க. மாற்றிப் பிறக்கும் வகையை நாடாது மாயை வலைப்பட்டு அசுத்த ஊசல் ஆடும் எம்போலிய சீவர்கள் திருவடியைக் கண்டு உய்தி அடைய முடியுமா? திருவடியைக் காண்டலும் அதனை மறப்பதின்றி மனத்துள் வைத்தலும் அதனால் மாற்றிப் பிறந்து பிணி மூப்புச் சாக்காடுகள் நீங்கி நித்தியத்துவம் பெறுதலும் எம்போலிய சீவர்களுக்கு எளிதாகுமா? திருவடி காணுதலின் அருமை திருவாசகம் திருவண்டப் பகுதி அகவலிலும், செத்திலாப்பத்து இரண்டாவது செய்யுளிலும் நன்று வலியுறுத்தப்பட்டது.

மேல் மாற்றிப் பிறத்தலின் அருமையும் பயனும் ஒரு சிறிது கூறி இக் கட்டுரை முடிக்கப்படும்.

வாய்மையான அருந்தல் பொருந்தல்களால்—ஒப்புர வொழுகுதலால் பஞ்ச பௌதிக தநு நிறையோடு பஞ்சீகரணிக்கப்பட்டால் ஆரூர்ப் பங்கஜதள மத்தியில் நடனமிடும் அப்பன் திருவடித் தாமரை காணப்படும் என்ப. திருவடித் தாமரையே நமது சீரமாகிய ஆலயத்துள் மறைந்திருக்கும் — மறையாயிருக்கும் வேதம் என்க; அமல ஐகார ஒலி என்க. இதுவே அநவரதம் ஒலித்துக் கொண்டிருப்பது—அசையாமல் அசைந்து கொண்டிருப்பது—நடனம் புரிவது என்க. சத்துச் சித்தாய், பெண்ணும் ஆணுமாய் இவ்விரண்டும் கூடிக் குழையும் காலத்து உண்டாகும் அசைவாய், அவ் அசைவே ஆண் ஒலி பெண்ஒலி சேர்ந்த அலி ஒலியாய், அர்த்தநார ஒலியாய் விளங்குவது அப்பன் திருவடிக்கமலம் என்க. இத்தகைய திருவடியைக் காண்பதென்றால் சரீர பாவனை ஒழிந்து—தற்சுதந்திரம் ஒழிந்து பெருந்துறைத் தரிசனம் பெறவேண்டும். மாற்றிப் பிறக்கும் வகையறியாது கற்பனையாகிய மாயா சொரூபங்களையே—நாம ரூபங்களையே உண்மை என நம்பி அமைவோர் பெருந்துறை கண்டு உய்தியடைதல் முடியாத காரியம். அன்னோர் இம்மாயாப் பிரபஞ்ச சாகரத்துள் முழுகி வருந்துபவரேயாவர். இது பற்றியே "ஆற்றிற் கிடந்து துறை தெரியாமல் அலைகின்றையே" என்றனர் பட்டினத்தடிகள் என அறிதற்பாற்று. (பெருந்துறை—அகண்டவெளி; பிரபஞ்சக் கூட்டம் அற்ற இடம்.) பெருந்துறை கண்டு கோகழியாகிய சமுத்திரத்தை நீந்தி அதன் மத்தியில் உள்ள திருவடி காண்பது—குரு தரிசனம் பெறுவது (குருந்தம் — குருவின் இடம் அடைவது) எளிதன்று. கழியை நீந்துவது என்றால் எளிதாகுமோ? கோகழியின் கரையாகிய வரையைக் காண்பதே அரிதினும் அரிதாம். திருவாசகம் திருவண்டப்பகுதி அகவலில்,

"திருவார் பெருந்துறை வரையில் ஏறி"

என வரை கண்டு வரையில் ஏறியமை கூறப்பட்டது. வரை கண்டு வரையில் ஏறியவன் படும்பாடென்னென்றுரைக்கப்படும்? ஐம்பூதப் பிரளயத்தால் இவன் படும் பாடு அளவு படுவதாகுமா? ஐம்பூதப் பிரளயம் என்றால் என்னை? அது தான் சரீரத்தினுள்ள பஞ்ச பௌதிகங்களும் ஒன்றாகிச் சேர்ந்து விடுதல்—குழைதல் என்பது. நினைக்கவும் சொல்லவும் படமுடியாத துன்பங்களைப் பிறர் அறிந்து ஐயுறவும் இடனாகாதவாறு அநுபவிக்கும் இவன்,

"செஞ்சுடர் வெள்ளந் திசை திசை தெவிட்ட வரை யுற"

என் செய்வான்? எவர் அறிவர்? அப்பன் கருணை நோக்கு இல்வழி இவன் பணி செய்து கிடக்கும் திறனுடையன் ஆவனோ? அப்பால் நிகழ்வது யாது? எனின், அது பின் வரும் ஷெ அகவல் அடிகளை நோக்கி அறிதற்பாலது

"ஐம்புலப் பந்தனை வாளர விரிய
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர
எந்தம் பிறவியிற் கோப மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கி"

அசுத்த ஐம்பூதக் கலப்பாலாய வினைப்போக தேகமே—அசுத்த நிறையே—கள்ளப் புலக்குரம்பைக் கட்டே "ஐம்புலப் பந்தனை வாளரவு" எனப்பட்டது. வாளரவு என்றார் சீறிக் கொத்தும் நாகமாதலின். இவ் அசுத்த பௌதிக நிறை அணு அணுவாக மாற்றமடைதலே—அமலமடைதலே "இரிதல்" எனப்பட்டது. "வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப" என்பதனால் துன்பம் களையப்படுதல் கூறப்பட்டது. இங்கே கூறப்பட்ட முரசே "பெருந்துறைக் கோன் முன்பால் முழங்கு முரசு" (திருவாசகம், திருத்தசாங்கம் செ. 8.) அப்பன் திருக்கருணை இதுவே. இதுவே அருளமுதம்—சாமகானம் என்க.

"கேதக் குட்டங் கையற வோங்கி
ஊழ் ஊழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்பறித் தெழுந்து"

இவ்விடத்தன்றோ இருவினையும் சமரசப்பட்டன; பட்டு வேறாகத் திரிந்தன. இருவினை சொரூபமாகிய உடலுயிர் சமரசப்பட்டு வேறாகத் திரிந்தனவாகும்—வேறு செய்யப்பட்டனவாகும்—மாற்றமடைந்தனவாகும். எவ்வாறு திரிந்தன—மாற்றமடைந்தன? எனின், அதனை உணர்த்துதற்கன்றே பின் வரும் அரிய பெரிய திருவாக்குக்கள் எழுந்தன என்பது

"பூவில் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை

இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கை யொழியச் செய்த
[வொண்பொருள்
இன்றெனக்கெளிவந்திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கைசெய்தோன் போற்றி
.................................
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றேனாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்."

பூவில் நாற்றம்— பூமணம் போலும் சிவமணம். "மணங் கமழ் தெய்வத்து இள நலம்" இதுவே என்க. அழிதரும் ஆக்கை—பிராரத்த தநுவாகிய—வினைப்போக தேகமாகியமருளுடம்பு. இது அளிதரும் ஆக்கையாக—விமல தேகமாக — விதேகமாக - ரக்ஷகதேகமாக மாற்றமடைந்தது — திரிந்தது என்க. தடப்பெரும் மதமாகிய விந்து மதம் என்னும் இந்து மதம் சித்திக்கப் பெற்றது என்க. என்புக்குள் அன்பு என்னும் அப்பில் உள்ள உப்பு கைப்பு என்னும் களிம்பு நீங்கி—துப்பு நீங்கி இன்பமாயிற்று என்பார் "அவயவஞ் சுவைதரு கோற்றேன் கொண்டு செய்தனன்" என்றார். [அவயவம்—உறுப்பு. உறு+உப்பு.] இம் மட்டோ! இல்லை! இல்லை! மூதூர் என்னும் கடவூரைப் (கடத்தை—சரீரத்தை) பற்றிய மும்மலத்தை அருட்பெருந் தீயில் ஒடுக்கினன். ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன். "முத்தி முதல்" (திருமந்திரம் 1ம் தந்- உபதேசம் செ. 13.) என்னும் சரீரத்துள்ள முப்பத்தாறு தத்துவங்களையும் அமலமாக்கினன். மயிர்க்கால் தோறும் அமுத தாரைகள் தேக்கின. (மலம் அமலமாயிற்று என்பது) சாதலுறச் சாதலடையச் செய்தனன். அடிக் குடில் வீடுபெற்று உய்ந்தது. அமுத தாரைகள் எலும்புத் துவாரங்களில் ஏற்றப்பட்டன. அள்ளூறாக்கை (அள்+ஊறு+ஆக்கை) அமைந்தது. அருட் சத்தி விளைவேறியதால் உடல் அமுத வடிவாயிற்று. பிணி மூப்புச் சாக்காடு பிறவியும் ஒழிந்து நித்தியத்துவம் சித்திக்கப் பெற்றது. ஈதன்றே மாற்றிப் பிறத்தல்! ஈதன்றே துவிஜத்துவம்! இதுவே நித்தியத்துவம்—முத்தி நெறி என்க. பின்வரும் திருவாக்குக்களை நோக்கி இவ் உண்மை கண்டு கொள்ளப்படுக.

"எற்றார் மூதூர் எழில்நகையெரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன்
...............................
தெரியேன் ஆவா செத்தேன்..............
..............................நாயுடலகத்தே
குரம்பைகொண்டின்தேன்பாய்த்திநிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதோறும் ஏற்றினன்........
...............................
அள்ளூறாக்கை அமைத்தனன்..........
...............................
அருளொடு பரா அமுதாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே."

இவ் வடிவமுடைய சீவன்முத்தர் சில காலம் உலக குரவராய் வதிந்து திருவருட் செயலாக ஆவன புரிந்து பின் இவ் அமல வடிவம் அருளாகிக் கரைந்து அருவமாகச் சிதாகாசப் பெருவெளியில் மறைந்து சிவாங்கமாவர்—உண்மைச் சைவ முத்தி அடைவர் என அறிதற்பாற்று. வேத உண்மை இதுவேயாகும்.

இவ்வாறு மாற்றிப் பிறந்து அமலமாய் அருளாய்—வெளியாய்—ஞானாகாச வடிவாய் உலகுகண்டிட மறைந்தவரே—மெய் விண் உறப் பெற்றவரே விதியை வென்றவர் — மாயையை வென்றவர்—மீண்டு வாரா நெறி கண்டவர்-கண்டு நித்தியத்துவம் பெற்றவர் என்க. மாற்றிப் பிறக்கும் வகை அறியாது மெய்யாகிய உடலைப் பொய்யாக்கி—பிணமாக்கி மாயை வலையில் அகப்பட்டு மாண்டு போன மற்றைய சீவர்கள் அசுத்தமான மாயாப் பிரபஞ்சத்துள் மீண்டு வரும் நெறியாகிய பிறவி நெறி கண்டவரே என்பதில் ஐயமுண்டோ? ஐயம் அடைய ஆமோ? "மெய் விண் உறுவார்க் கில்லை விதி" என்று வெள்ளிடை மலைபோல் கூறி விட்டாளே ஆதி சத்தியின் அவதாரம் என்று போற்றப்பட்ட ஔவை! இதனை நோக்கினார் உண்டோ? இதனினும் சிறந்த பிரமாணம் வேறு வேண்டுமோ? உடல் பிணமாதல் பிறவி நெறி என்பது இதனால் நன்கு புலப்படவில்லையா?

"உணர்வாவதெல்லாம் உடம்பின்பயனே
உணர்க உணர்வுடையார்"

என்றாள் ஔவை. (குறள்-உடம்பின் பயன், செ.2) "உள்ளது சொன்னோம் உணர்வுடையோர்க்கே." என்றனர் திருமூலர். "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே." என்றனர் தொல்காப்பியர். ஆதலால் உணர்வுடையார் உணர்க. அல்லாத அபிமானிகள் அவ்வளவில் மகிழ்க.

"உள்ளதைச் சொன்னால் நொள்ளைக்கு நோக்காடு." என்பது பழமொழி.

இதுகாறும் கூறியவைகளால் கற்பனைகள் வாயிலாக உண்மை கண்டுணர்ந்து குருநெறி கடைப்பிடித்து மாற்றிப் பிறவாது அக்கற்பனைகளையே உண்மை என நம்பி அமைதலால் அறமுதல் நாற்பொருட் பயனை அடைதல் முடியாத காரியம் என்பதும், இருவினை சமரசப்படுதலால் உடலுயிர் விமலமாய் அமலமாய் மாற்றமடைதலே மாற்றிப் பிறத்தலாகிய துவிஜத்துவம் என்பதும், அப்பெற்றி வாய்ந்த தத்துவப்பெரியாரே விதியை வென்று அருளாய் வெளியாய்ச் சிதாகாசப் பெருவெளியில் உலகுகண்டிட மறைந்து உண்மை முத்தி அடைவார் என்பதும், இதுவே மீண்டு வாரா உண்மை நெறி என்புதும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

## அறிவிப்பு

---

கடிதர்களின்
அபிப்பிராயங்களுக்கு
அவர்களே பொறுப்பாளிகள்

# பெண்பாற் புலவர்கள்

(37-ம் வாரத்தொடர்ச்சி)

## சங்க கால ஔவையார்

இது முதல் இருவரது நட்பும் கனிந்து சிறந்து விளங்கியது. ஔவையார் அவனது அருள் அன்பு, வீரந் தியாகம் நியாயம், குடியோம்பல், காண்டற் கெளியனாந் தன்மை முதலியவற்றை நன்கு விளக்கிப் பாடினார்.

இவ்வா றவ்வையா ரஞ்சியுடனமர்ந்து வரும் நாளில் காஞ்சி நகரக் காவலனாகிய தொண்டைமான் அதிகமானைத் தன்னிலும் மெல்லியனெனக் கருதி அவனோடமருடற்றற் கமயம் நோக்கியிருந்தான். இதனையறிந்த அதியமான் அவனுக்குத் தன்னாற்றலையும் அஞ்சாமையையும் அஞ்சாது அறிவித்தற்கு எண்ணி ஔவையாரை அவனிடம் தூது செல்லுமாறு வேண்டினான். ஔவையாரும் அதற்கிசைந்து தொண்டைமானுழைத் தூது சென்றார்.

சென்றவரைத் தொண்டைமான் எதிர் கொண்டழைத்து உபசரித்தான். பின்னர் தன் படைப் பெருமையையும் ஆயுதங்களின் தொகையையும் அவருக்குக் காட்ட விரும்பி அவரைத் தன் ஆயுதசாலைக்கு அழைத்துச் சென்றான். அங்கு கண்டோர் கண்ணைக் கவருமாறு பளபளப்பாயிருந்த பல்வகை ஆயுதங்களையும் அவருக்குக் காட்டினான்.

ஔவையார் அவன் செருக்கை யடக்கி அறிவுச் சுடர் கொளுத்த எண்ணி

"இவ்வே பீலியணிந்து மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்திநெய் [யணிந்து
கடியுடை வியனகரவ்வே, யவ்வே,
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்றும்
உண்டாயிற் பதங் கொடுத்து
இல்லாயி னுடனுண்ணும்
இல்லோ ரொக்கல் தலைவன்
அண்ணல் எங்கோமான் வைந்நுதி [வேலே."

எனுஞ் செய்யுளைச் செப்பினர். இச் செய்யுளில் தொண்டைமான் படைக்கலத்தைப் புகழ்வது போல் பழித்தமையும், அதிகமான் படைக்கலத்தைப் பழிப்பது போல் புகழ்ந்தமையும், பகைவர்க்கஞ்சியே தொண்டைமான் கடியுடை வியனகரி லிருக்கின்றான், அதிகன் அவ்வாறிருக்கின்றானில்லை என்பது குறிப்பாற் புலப்படக் கூறினமையும், தொண்டைமான் அதிகன்போல் 'உண்டாயிற் பதங் கொடுத்து இல்லாயின் உடனுண்ணும்' வண்மையுடையனல்லன் என்பது தோன்றக் கூறினமையும் பிறவும் அறிந்தின்புறற் குரியன.

இங்ஙனஞ் செப்பலும் அவன் ஔவையாரை நோக்கி "விறலி எம்மொடு போர்செயும் வலியுடையாரும் நும் நாட்டுளரோ?" என வினாவினான். அதற்கு அவர் 'எம்முடைய நாட்டின் கண் இளைய வலிய வீரருமுளர், என் தலைவனுமுளன்' என்று கூறி அவன் செருக்கை அடக்கிவிட்டுத் திரும்பினார்.

இவர் தூதுபோய் மீண்ட சின்னாட்களுக்குப் பின்னர் திருக்கோவலூர் அரசனாகிய மலையமான். திருமுடிக்காரி யென்பான் வேற்றரசரைப் போரில் வென்று தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர் என்று பெருமிதங் கொண்டிருந்தான். இதனையறிந்த அதியமான் அவன் பெருமிதத்தை அழித்துத் தன் வீரத்தையும் புகழையும் மேம்படுத்தக் கருதித் தன் நாற்பெரும் படையொடும் சென்று அவன் மதிலை வளைத்தான். காரியும் காரிக் குதிரையூர்ந்து தன் படைகளோடு வந்தெதிர்த்தான். அதியமான் தன்வேலாலும், வாளாலும், படையாலும், கரியாலும், பரியாலும் காரியின் படையைத்தாக்கிப் பொருதினான். அவ்வமயம் அப்போர்க்களத்தில் அதிகமானுடனின்ற ஔவையார் காரிக்கும் அவன் படையினர்க்கும் அதிகமானுடை வீரத்தை அறிவுறுத்தி அதிகமானைப் பணிந்து போகுமாறு கூறுபவராய் "அதிகமான் போர் செய்தற்கு உறையினின்றும் உருவிய வாள்கள் பகைவரது தசையின் கண்ணே பதிந்து கதுவாய் போய் வடிவிழந்தன; அவனது வேல்கள் பகைவர் அரண்களை வென்றவர் நாட்டை அழித்தலால் காம்பும் ஆணியும் அசைந்துகெட்டன; அவன் களிறுகள்கணையத்தால் தடுக்கப்பட்ட கதவைப்பொருது பகைவரது அரணை அழித்தலால் அவற்றின் தந்தப் பூண்கள் கழன்றன, அவன் குதிரைகள் போர் வீரர்கள் மார்பை ஓடியோடி உழக்குதலால் இரத்தக் கறைப்பட்ட குளம்பையுடைய வாயின; அதியமானோ நிலவுலகம் அடங்காத படையையும் பலவின அம்புகள் துளைத்த கேடயத்தையு முடையவன்; போர்க்களத்தில் அவனாற் கோபிக்கப்பட்டோர் பிழைத்தல் எங்கேயுளது? உங்கள் ஊர்களை விரும்புவீர்களாயின் அவனுக்குத் திறை கொடுத்தல் வேண்டும் கொடீராயின் அவன் அவ்வூர்களை நீங்கள் விரும்புதற்கு உடன்படுவானல்லன். அவன்போர்த்திறத்தை யான் உள்ளவாறு கூறினேன். இதனை அறிந்து அவனைப் பணியீர்களாயின் உங்கள் மனைவியரை நீங்கள் பிரிதல் வியப்பன்று, ஆகையால் இதனை ஆராய்ந்து போர் செய்மின்" என்று அதிகமான் ஆற்றலை யெல்லாம் எடுத்துரைத்தார்.

இங்ஙனம் இவருரைத்தும் மலையமான் மானத்திற்கஞ்சி, தன்னுயிர்க்கும் பிறவுயிர்க்கும் கொஞ்சமு மிரங்காது அஞ்சியுடன் அஞ்சாது நின்று அமருடற்றினான். ஈற்றில் மலையமான் அதிகமானுக்குப் புறங்கொடுத்தோடினான். அவன் படைகள் நிலைகுலைந்தன. திருக்கோவலூர் அஞ்சியின் ஆட்சிக்குட்பட்டது.

(தொடரும்.)

Sandhanam Printing Works, Pondicherry. Le Gérant, R. Nagarattinam